சங்கீதங்கள் 73:26

கொரிந்தியர் 2 12:10

இதனிமித்தம் எனக்கு உண்டா கும் பலவீனங்களிலும், அவமானங்க ளிலும், இக்கட்டுகளிலும், கலாபங்களி லும், நெருக்கிடைகளிலும், கிறீஸ்துவைப்பற்றி நான் பிரியப்படுகிறேன். ஏனெனில் எப்போது பலவீனப்படுகிறே னோ, அப்போது வல்லவனாயிருக்கி றேன்.

இசாயாஸ் ஆகமம் 40:29

அவர்தான் களைத்தவனுக்குப் பலங்கொடுக்கின்றவர்; அபல மானோர்க்குச் சத்துவத்தையும் பலத்தையும் மூட்டுகிறவர்.

அர்ச். மத்தேயு சுவிசேஷம் 11:28

வருந்திச் சுமை சுமந்திருக்கிற வர்களாகிய நீங்களெல்லோரும் என் அண்டையில் வாருங்கள், நான் உங்க ளைத் தேற்றுவேன்.

இராயப்பர் பொது நிருபம் 1 5:7

அவர் உங்களை விசாரிக்கிறவராகையால், அவர்மேல் உங்கள் சகல கவலைகளையும் வைத்துவிடுங்கள். (சங். 54:24; மத். 6:25; லூக். 12:22.)

உரோமாபுரியார் 1 8:26

அவ்வண்ணமே, இஸ்பிரீத்துவானவரும் நமது பலவீனத்தைத் தாங் கிக்கொண்டுவருகிறார். எவ்வாறெனில், நாம் தக்கபடி மன்றாடிக் கேட்கிற தென்னவென்று அறியாமலிருக்கி றோம். ஆனால் இஸ்பிரீத்துவானவரே நமக்காக வாக்குக்கெட்டாத பெரு மூச்சுகளோடு பிரார்த்திக்கிறார்.

பிலிப்பியர் 4:13

என்னைப் பலப்படுத்துகிறவரைக்கொண்டு என்னால் எல்லாங்கூடும்.

## தீமோத்தேயு 2 1:7

ஏனெனில், சர்வேசுரன் நமக்குப் பயத்தின் இஸ்பிரீத்துவைக் கொ டாமல், தைரியம், சிநேகம், மனஅமைதி என்பவற்றின் இஸ்பிரீத்துவைக் கொடுத் திருக்கிறார். (உரோ. 8:15.)

## பழமொழியாகமம் 17:22

ஆனந்திக்கிற மனம் உடலை மலரச் செய்கிறது; துயரமான மனம் எலும்புகளைகூட வற்றச்செய் கிறது (பழ. 15:13).

## அர்ச். மத்தேயு சுவிசேஷம் 26:41

நீங்கள் சோதனைக்குட்படாத படிக்கு விழித்திருந்து, ஷெஜபஞ் செய் யுங்கள். மனமானது வேகமுள்ளதுதான், மாம்சமோ துர்ப்பலமுள்ளது என்றார்.

## பழமொழியாகமம் 31:8

ஊமைக்காகவும் உன்னிடத்தில் வருகிற கைவிடப்பட்டவர்களுக் காகவும் உன் வாயைத் திற.

## எபிரேயருக்கு எழுதிய நிருபம் 4:15

ஏனெனில் நமக்கு உள்ள குருப் பிரசாதியானவர் நம்முடைய பலவீனங் களில் நமக்கு இரங்கமாட்டாதவர் அல்ல. ஆனால் பாவம் நீங்கலாக மற்ற எவ்விதத்திலும் அவர் நமக்கு ஒத்தவ ராய்ப் பரிசோதிக்கப்பட்டவராமே.

## கொரிந்தியர் 2 12:9

அதற்கு அவர் மறுமொழியாக: என் வரப்பிரசாதமே உனக்குப் போதும். ஏனெனில் பலவீனத்திலே என் வல்லமை பூரணமாய் விளங்குகின்றது என்றார். ஆகையால் கிறீஸ்துவின் வல்லமை என் னிடத்திலே வாசம்பண்ணும்படிக்கு என் பலவீனங்களிலே சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.